03.02.16

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### நான்கு ஆண்டுகளில் 32 லட்சம் பேர் பார்வை வேளாண் இணையத்தால் கிராம விவசாயிகள் பயன்

கோவை:'அக்ரி போர்டல்' எனும் வேளாண் பல்கலை இணையதளத்தை, கடந்த நான்கு ஆண்டுகளில், 32 லட்சம் பேர் பார்வையிட்டுள்ளனர். இதன் வாயிலாக, நவீன தொழில்நுட்பம், விவசாயத்தில் அதிகளவில் பயன்படுத்தப்படுவது தெரியவந்துள்ளது என, விரிவாக்க ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வேளாண் பல்கலை அறிமுகம் செய்யும், ஆராய்ச்சிகள் மற்றும் கண்டுப்பிடிப்புகள் தொழில்நுட்பங்கள், அனைவரையும் சென்றடைய, வேளாண் பல்கலை, விரிவாக்க மையம், 2008ம் ஆண்டில் இணையதளம் உருவாக்கியது. தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், உருவாக்கப்பட்ட இந்த இணையதளத்தில், விவசாயம் சம்பந்தப்பட்ட, அனைத்து தகவல்களும் துறைவாரியாக, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனால் பார்வையிடும் விவசாயிகளின் எண்ணிக்கை, அதிகரித்து வருகிறது.

இணையதளத்தில், வேளாண், தோட்டக்கலை, கால்நடை, மீன்வளர்ப்பு, பட்டுப் புழு வளர்ப்பு, வனவியல், வேளாண் பொறியியல், விதை, அங்கக வேளாண்மை என துறை தகவல்கள், தனித்தனியே குறிப்பிடப்பட்டுள்ளன. விவசாயிகளுக்கான அரசு மானிய திட்டங்கள், தொழில்நுட்பங்கள், வானிலை, வங்கி கடன், விவசாயம் குறித்த தினசரி நாளிதழ் செய்திகள், இயற்கை வேளாண்மை, பயிர்மருத்துவம் என, துறைவாரியாக, 8.5 லட்சம் பக்கங்களடங்கிய தகவல்கள், பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

விளைநிலத்தில், சாகுபடி செய்யப்படும் பயிர்களுக்கு, அடிஉரம் போடுதல், பூச்சி கட்டுப்பாடு, இயற்கை முறையில் மகசூல் பெறுதல், சந்தைப்படுத்தல் உள்ளிட்ட அடிப்படை சந்தேகங்களுக்கான பதில்கள், துறைவாரியாக குறிப்பிடப்பட்டுள்ளன.விவசாயிகள் மட்டுமல்லாது, தொழில்முனைவோர், வியாபாரிகள், வேளாண் மாணவர்கள், மதிப்பூட்டல் பொருட்கள் தயாரிப்பவர்கள் என, நான்கு ஆண்டுகளில், 32 லட்சம் பேர் பார்வையிட்டுள்ளனர். இதில், வெளிநாட்டினரும் உண்டு. ஒரு நாளைக்கு சராசரியாக, 1200 புதிய பார்வையாளர்கள் பார்வையிடுவதாகவும், 66 சதவீதம் பேர், தினமும் உபயோகிப்பதாகவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குறைந்த விளைநில பரப்பில், அதிக செலவில்லாமல், தரமான முறையில் அதிகளவு மகசூல் பெறும் விவசாயிகளை, அங்கீகாரப்படுத்தும் வகையில், சிறப்பு பக்கம் உருவாக்கப்பட்டுள்ளது. இதனுடன், அவர்களின் ஒலி, ஒளி காட்சி விளக்கப்படமும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண் பல்கலை, விரிவாக்க கல்வி இயக்க இயக்குனர் பிலிப் கூறுகையில், "நவீன தொழில்நுட்பம், விளைநிலத்தில் பயன்படுத்தப்படும் போதே ஆராய்ச்சிகளும், கண்டுப்பிடிப்புகளும் முழுமையடையும். தொழில்நுட்பத்துக்கும், விவசாயிக்கும் ஒரு பாலமாக தான் இணையதளம் உருவாக்கப்பட்டது. இதனை பார்வையிடுவோர் அதிகரித்து வருவதால், விவசாயம் மறுமலர்ச்சி அடைந்து வருகிறது. இணையதளத்தை பார்வையிடும் வெளிநாட்டவர் பலர், இங்கு வந்து பயிற்சி பெற்று செல்கின்றனர்," என்றார்.

விவசாயிகள் www.agriportal.com எனும் இணையதள முகவரியில் சென்று பயன் பெறலாம்.

**வாசமில்லா மலரிது; வசந்தத்தை காட்டுது!**



வாசமில்லா விட்டாலும் கண்ணைக் கவரும் விதத்தில் அழகாக இருப்பதால் மாலைகளில் மகுடம் சூட்டப் பயன்படுகிறது கோழிக்கொண்டைப்பூக்கள்.

மதுரை செக்கானூரணி கிண்ணிமங்கலம் கிராமத்தில் பூ சாகுபடி செய்யும் பட்டதாரி குடும்பத்தலைவி விஜிக்கு பிடித்ததும் இப்பூக்கள் தானாம். இனி பூக்களின் வாசமாய் அவர் கூறியது:

கோழிக்கொண்டை பூக்கள் சிவப்பு, மஞ்சள், ஆரஞ்சு, ரோஜா வண்ணங்களிலும் பூக்கின்றன. சிவப்பு ரோஜா மாலைகளில் இடையிடையே இப்பூக்களும் தொடுக்கப்பட்டு, ரோஜா பூவின் தோற்றத்தையும் அந்தஸ்தையும் பெற்று விடுகின்றன. பல வண்ண மாலைகளில் கண்ணைக் கவரும் சிவப்பு, மஞ்சள், ஆரஞ்சு, ரோஜா நிறப்பூக்கள் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. இவை எட்டு நாட்கள் வரை வாடாமல் இருப்பதும் அதன் பயன்பாட்டுக்கு முக்கியக் காரணம். நாங்கள் சிவப்பு மற்றும் ரோஜா வண்ணப் பூக்களை சாகுபடி செய்கின்றோம்.

மழை, கோடை என இரு பருவத்திற்கும் ஏற்றது. நாங்கள் கீரை சாகுபடி அதிகம் செய்வதால் மழைக்காலத்தில் மட்டும் நடவு செய்கின்றோம்.

எல்லா மண்ணிலும் எளிதாக வளரும். எல்லா சாகுபடியைப் போன்று 4, 5 முறை நிலத்தை நன்றாக உழுவது வழக்கம். அடியுரமாக மாட்டுச் சாணம் சேர்க்கிறோம். ரசாயன உரம் சேர்ப்பதில்லை. மண்ணின் தன்மையை பொறுத்து உழும் முறை மற்றும் எண்ணிக்கையை மாற்றிக் கொள்ளலாம். பத்து செடிக்கு குறைந்த பட்சம் 1 - 2 கிலோ வரை பூக்கள் எடுக்கலாம். புழுக்கள் தாக்கத்தின் போது குறைவான ரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளைதெளிக்கிறோம்.

பூத்தவுடன் பத்து நாட்களுக்கு ஒரு முறை வீதம் 4 அல்லது 5 முறை பூ பறிக்கலாம். பூத்தல் நின்ற பிறகு இவற்றை சுழற்சி முறையில் உரமாக பயன்படுத்தலாம் தரமான பூவிலிருந்து விதைகளைச் சேகரித்து அதனை மறுமுறைக்கு பயன்படுத்துகின்றோம். நாற்று முறையில் வளர்க்க வேண்டும். விதைத்த 5ம் நாளில் தளிர்விடும். செடி நட்ட 40 நாட்களில் பூக்கத் துவங்கி விடும். தண்ணீர் வசதியுள்ள விவசாயிகள் கோடை காலத்தில் செய்யலாம். வறட்சி, கடும்குளிர் இரண்டையும்தாங்கிவளரும்.

10 நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் பாய்ச்சுகிறோம். குறுகிய நிலத்தில் பயிரிட ஏற்றது. பூ உதிர்தல், நோய் தாக்குதல் அதிகப்படியாக கிடையாது. உரம், களை எடுத்தல் செலவு இல்லை. பூ பறிப்பது, சாகுபடி செய்வது எளிமையானது. சீசன் நேரங்களில் கிலோ ரூ.60 முதல் ரூ.100 வரை விலைபோகும். சராசரியாக கிலோ ரூ.35 முதல் ரூ.40 வரை உறுதியாக கிடைக்கும். மதுரை மாட்டுத்தாவணி அல்லது செக்கானூரணி மார்க்கெட்டில் விற்பனை செய்கிறோம். பட்டப்படிப்பு என்பது வெறும் அறிவுதான்.

விவசாயம் தான் உயிர்நாடி. அதனால் தான் கணவர் வீரபுத்திரனுடன் இணைந்து விவசாயத்திற்கு உறுதுணையாக இருக்கிறேன், என்றார். தொடர்புக்கு9751512916

**- வித்யாசன், மதுரை.**

**வெங்காயத்தில் வெண்திட்டுக்களா**



வெங்காயப் பயிரில் இலைப்பேன் தாக்குதலால், இலை முழுவதும் வெண் திட்டுக்கள் காணப்படும். தாக்கப்பட்ட இலையின் நுனியில் இருந்து காயத் தொடங்கும். இலைகளை வெண்ணிற அட்டையின் மீது தட்டினால் சிறிய மெலிந்த வெளிர் மஞ்சள் மற்றும் சாம்பல் நிற இலைப்பேன்கள் நகர்ந்து செல்லும். வயலை சுத்தமாக வைத்துக் கொள்வதோடு சீரான இடைவெளியில் களை எடுக்க வேண்டும். தாக்குதல் தீவிரமாக இருந்தால், ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு மில்லி டைமீதோயேட் கலந்து தெளிக்கலாம் அல்லது ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லி புரேபினோபாஸ் மருந்து கலந்து, கைத்தெளிப்பான் மூலம் இலைகளில் திரவம் படும்படி தெளிக்கலாம். வெங்காய ஈ தாக்குதலால் இலைகள் வாடும். இலைகள் தளர்வுற்று வெங்காய குமிழ்கள் வளர்ச்சி சிதைந்து திசுக்கள் அழுகிவிடும். இதற்கு சீரான பயிர் சுழற்சி முறையை பின்பற்ற வேண்டும். ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லி மாலத்தியான் மருந்து கலந்து தெளிக்கலாம். அடித்தாள் அழுகல் நோயில் இலை மஞ்சள் நிறமாக மாறி, நுனியிலிருந்து கீழ் நோக்கி காயும். செடியின் இலைப்பரப்பு முழுதும் வாடும். வெங்காய

குமிழ் மென்மையாகி அழுகும்; வேர்கள் அழுகும். அறுவடை செய்த வெங்காய குமிழ்களை சுத்தமாக சேமிக்க வேண்டும். மண்ணில் தாமிர அளவு குறையும் போது நோய் தாக்குதல் ஏற்படும். ஒரு லிட்டர் தண்ணீருக்கு இரண்டரை கிராம் காப்பர் ஆக்சிகுளோரைடு மருந்து கரைத்து மண்ணில் ஊற்றலாம். **- குணசேகரன், தலைவர், பருத்தி ஆராய்ச்சி நிலையம், ஸ்ரீவில்லிபுத்தூர்.**

**உணவு பூங்கா அமைக்கலாமா**

மதுரை அரசரடியில் உள்ள தமிழ்நாடு தொழில் முனைவு மேம்பாட்டு மையம் விவசாயிகளுக்கு வழிகாட்ட வேளாண் வணிகப் பிரிவை துவக்கியுள்ளது.

மதுரை, திண்டுக்கல், தேனி, ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகரைச் சேர்ந்த 100 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை, சேமிப்பு கிடங்கு மற்றும் உணவு பூங்கா அமைக்க உள்ளது. இதுகுறித்து வணிகப்பிரிவு ஆலோசகர் ராஜகோபால் கூறியது: விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்கவேண்டும்; அவற்றை மதிப்பு கூட்டிய பொருட்களாக்கி சந்தைப்படுத்த வேண்டும்; தொழில்நுட்ப ரீதியாக முன்னேற வேண்டும். விவசாயிகளுக்கான இப்போதைய தேவை இவை தான். மத்திய அரசின் உணவு பதப்படுத்தும் தொழில்கள் அமைச்சகம் உணவு பூங்கா அமைக்க ரூ.50 கோடி மானியம் தருகிறது. விவசாயிகள் ஆங்காங்கே பயிரிடுகின்றனர். பொது சேவை மையம் அமைத்து விளைபொருட்களை மதிப்பு கூட்டி உணவு பூங்கா மூலம் விற்பனை செய்யலாம். இதை தனிநபர்களால் செய்ய முடியாது. ஆறு மாவட்டங்களில் காய்கறி, பழங்களுக்கான உணவு பூங்கா அமைக்கலாம். முதலில் அறுவடை நேர்த்தியை கடைப்பிடிக்க வேண்டும். வாழை என்றால் மொத்த தாராக வெட்டுகின்றனர். சீப்பு சீப்பாக வெட்டி பதப்படுத்தும் மையத்திற்கு கொண்டு வந்து பவுடர், சிப்ஸ் தயாரிக்கலாம். 100 விவசாயிகள் ஒன்று சேர்ந்தால் உணவு பூங்கா அமைக்கலாம்.

விவசாயம் சார்ந்த அனைத்து ஆலோசனைகளும் வழங்க தயாராக உள்ளோம், என்றார். தொடர்புக்கு 94429 70118.

## தக்காளியில் தாக்குதலா!



தென்அமெரிக்காவின் ஊசி இலை துளைப்பான் அல்லது நுண்காய் துளைப்பான் தற்போது இந்திய தக்காளியில் தாக்குதலை துவக்கியுள்ளது.

தர்மபுரி காரிமங்கலம் கொல்லுபட்டி கிராமத்தில் கடந்தாண்டு மார்ச்சில் இதன் தாக்குதல் கண்டறியப்பட்டது. பழுப்புநிற தாய் அந்து பூச்சிகள் நீள்வட்ட வடிவ வெண்ணிற முட்டைகளை இலையின் அடிப்பகுதி, இளம் மொட்டு, காயின் காம்புகளில் இடுகிறது. தண்டு, காய், பழங்களில் நுண்துளைகளை ஏற்படுத்துகிறது. இதனால் இலைகள் காய்ந்து செடிகள் வாடி வளர்ச்சி முற்றிலும் பாதிக்கப்படுகிறது.

கோடை உழவு செய்வதன் மூலம் மண்ணில் மறைந்துள்ள கூட்டுப்புழுக்களை வெளிக் கொணர்ந்து அழிக்கலாம். எக்டேருக்கு 40 - 50 வரை இனக்கவ்ச்சி பொறிகள் வைத்து தாய் அந்து பூச்சிகளை

கட்டுப்படுத்தலாம்.
அறுவடையின் போது பாதிக்கப்பட்ட பழங்களை சேகரித்து அழிக்க வேண்டும். டிரைகோகிரம்மா கைலோனிஸ் அல்லது டிரைகோகிரம்மா ப்ரட்டியோசம் முட்டை ஒட்டுண்ணியை எக்டேருக்கு 40 ஆயிரம் முதல் 50ஆயிரம் வரை விடலாம்.
பாதிப்பை கட்டுப்படுத்த ஒரு லிட்டருக்கு ஸ்பைனோசேட் அல்லது ப்ளூபென்டமைடு 0.5 மில்லி சேர்த்து தெளிக்கலாம். ஒரு லிட்டருக்கு 2 மில்லி பேசில்லஸ் துரிஞ்சியன்சிஸ் கலந்து தெளிக்கலாம்.
**-இந்திராகாந்தி, வேளாண் துணைஇயக்குனர், நீர் மேலாண்மை பயிற்சி நிலையம், மதுரை.**

## 20 கிலோ சர்க்கரை பூசணி: மார்க்கெட்டில் மக்கள் வியப்பு




கோபி: கோபி காய்கறி மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வந்த, 20 கிலோ எடை சர்க்கரை பூசணியை மக்கள் ஆச்சர்யத்துடன் பார்த்துச் சென்றனர். கோபி மார்க்கெட் வீதியை சேர்ந்தவர் சின்னபாப்பா. காய்கறி வியாபாரி; பல்வேறு இடங்களில் இருந்து வாங்கி வந்து வியாபாரம் செய்கிறார். கடையில், 20 கிலோ எடை கொண்ட சர்க்கரை பூசணிக்காயை நேற்று விற்பனைக்கு வைத்திருந்தார். தர்மபுரி மாவட்டம் பாலக்கோட்டில் இருந்த இதை வாங்கி வந்துள்ளார். இதே எடையில் மொத்தம், மூன்று

காய்களை விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தது. இதை மக்கள் பார்த்து வியந்தனர்.

## 15 கிராமங்களுக்கு பி.ஏ.பி., திட்டம் விரிவுபடுத்த விவசாயிகள் எதிர்பார்ப்பு! 13,595 ஏக்கர் நிலங்கள் வளம்பெற வாய்ப்பு

பொள்ளாச்சி: ஆண்டுதோறும் வறட்சியில் சிக்கும், பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட, 13 ஆயிரத்து 595 ஏக்கர் வளம் பெற, பி.ஏ.பி., திட்டத்தை, 15 கிராமங்களுக்கு நீட்டிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என, விவசாயிகள் போர்க்கொடி உயர்த்தியுள்ளனர்.

பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்தின் பெரும்பகுதி பி.ஏ.பி. திட்டத்தில் பலன் பெறுகின்றன. இப்பகுதியில், தென்னை மற்றும் காய்கறிகள் பயிரிடப்படுகின்றன. பாசன கிணறுகளிலும் நீர் மட்டம் உயர்ந்து காணப்படுகிறது. வாய்க்கால் பாசனமும் வளப்படுத்துகின்றன.

இதற்கு நேர்எதிராக, மழைக்காலத்தில் மட்டும் பசுமையாக காணப்படும் ஒன்றியத்தின் வடமேற்கு பகுதிகள், வறட்சிக்காலத்தில் தண்ணீர் இன்றி கடும் வறட்சிக்கு இலக்காகின்றன.

புரவிபாளையம் பஞ்சாயத்துக்கு உட்பட்ட ஜமீன்காளியாபுரம், ஜமீன்முத்துார், கோவிந்தனுார், களத்துார், பெரும்பதி, முத்துக்கவுண்டனுாரின் தென்பகுதி, கானல்புதுார், புரவிபாளையம் ஆகிய எட்டு கிராமங்களும், சேர்வகாரன்பாளையம் பஞ்சாயத்துக்கு உட்பட்ட எஸ்.குமாரபாளையம், வடக்குக்காடு, சேர்வகாரன்பாளையம், மாப்பிள்ளைகவுண்டன்புதுார் உள்ளிட்ட ஐந்து கிராமங்களும், வடக்கிபாளையத்துக்கு பஞ்சாயத்தின் இரண்டு கிராமங்கள் என, 15 கிராமங்கள் மழையை நம்பி உள்ள விவசாய நிலத்தை கொண்டவை ஆகும்.

பல ஆண்டுகளுக்கு முன், இப்பகுதியில் நீர் வளம் இருந்ததால், அப்போதைய நிர்வாகம் வாய்க்கால் வேண்டாம் என தெரிவித்து விட்டதாக விவசாயிகள் தெரிவித்தனர். ஆனால், இன்று இப்பகுதிகள் மானாவாரி நிலங்களாக மழையை மட்டுமே நம்பியுள்ள பகுதிகளாகி விட்டன. அடுத்த சில மாதங்களில் இப்பகுதியில் கடும் வறட்சி ஏற்பட்டு, கால்நடைகளுக்கு தீவனம் கூட கிடைக்காத நிலை ஏற்பட்டு விடும். இப்போதே, புல்வெளிகள் காய்ந்த, பச்சை நிறமானது பழுப்பு நிறத்துக்கு மாறிவிட்டது.

கடந்த பல ஆண்டுகளாக, பி.ஏ.பி.,வாய்க்கால் பாசனத்தை, இக்கிராமங்களுக்கும் நீட்டிக்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இன்றைய நிலையில், புரவிபாளையத்தை அடுத்துள்ள புலிப்பாறை தடுப்பணையில் தேங்கும் நீரை நம்பியே கிணற்று பாசனத்தை சிலர் மேற்கொண்டுள்ளனர். இத்தடுப்பணையின் உயரத்தை அதிகரித்து, நீரை தேக்கி வைத்தால் கூட, கூடுதலாக பல நுாறு ஏக்கர் பாசனம் பெறும்.

**'தடுப்பணை உயரத்தை அதிகப்படுத்த வேண்டும்'**

இதுகுறித்து, புரவிபாளையத்தைச் சேர்ந்த மூத்த விவசாயி வடிவேல் கூறுகையில், "கோதவாடி குளத்தில் இருந்து ஆற்றில் வரும் தண்ணீரால், பாசனக்கிணறுகளின் நீர்மட்டம் உயர்ந்து, விவசாயம் ஓரளவு செழிக்கும். புலிப்பாறை தடுப்பணையை அகலப்படுத்தி உயரத்தை அதிகப்படுத்தினால் பல நுாறு ஏக்கர் பலனடையும்," என்றார். தமிழகத்தை ஒட்டியுள்ள கேரள பகுதியில், 22 கி.மீ., துாரத்துக்கு வாய்க்கால் வெட்டும் பணி துவங்கியுள்ளது. இதைக்காரணம் காட்டி, வடக்கு ஒன்றியத்தின், 15 கிராமங்களில் உள்ள, 13 ஆயிரத்து 595 ஏக்கர் விளை நிலங்கள் பாசனம் பெறும் வகையில், பி.ஏ.பி.,பாசன திட்டத்தை, நீட்டிக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது.

## மொட்டு காளான் வளர்ப்பு மாவட்ட கலெக்டர் ஆய்வு

கோத்தகிரி:கோத்தகிரியில், மொட்டு காளான் வளர்ப்பு மற்றும் கொய்மலர் சாகுபடியை கலெக்டர் ஆய்வு செய்தார்.

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சி இயக்கத்தின் சார்பில், வங்கிக்கடன் உதவியுடன், காளான் வளர்ப்பு மற்றும் கொய்மலர் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.கோத்தகிரி பாண்டியன் பார்க் பகுதியில், 40 லட்சம் மதிப்பில், 16 லட்சம் மானியத்துடன், கம்போஸ்ட் தயாரிப்புடன், காளான் வளர்ப்பு உற்பத்தி நடக்கிறது.

வங்கி கடன் உதவியுடன் கூடிய பின்னேற்பு மானியத்தில் பசுமை குடிலில் நடந்துவரும் காளான் வளர்ப்பு உற்பத்தியை, மாவட்ட கலெக்டர் சங்கர் பார்வையிட்டார்.

இதில், தோட்டக்கலை இணை இயக்குனர் மணி, உதவி தோட்டக்கலை இயக்குனர் உமாராணி, துணை இயக்குனர் சிவசுப்ரமணியன், கோத்தகிரி தோட்டக்கலை உதவி இயக்குனர் சித்ராபானு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## விவசாயிகளுக்கு பட்டறிவு பயற்சி

சாணார்பட்டி,:சாணார்பட்டி வட்டார வேளாண்மை விரிவாக்க மையம் சார்பில் அட்மா திட்டத்தில் விவசாயிகளுக்கு பட்டறிவு பயற்சி அளிக்கப்பட்டது.வேளாண்மை உதவி இயக்குனர் இளங்கோவன் துவக்கி வைத்தார். தாடிக்கொம்பு, ராகலாபுரம், தேத்தாம்பட்டி, தவசிமடை உள்ளிட்ட பகுதி விவசாயிகள் பங்கேற்றனர். குளிர்பதன கிடங்குகளில் விளை பொருட்கள் சேமிப்பு, சூரியதி மூலம் மோட்டார் இயக்குதல், காளான் பண்ணை அமைத்தல், இயற்கை முறையில் நாற்றங்கால் அமைத்திருப்பது, ரோஜா வளர்ப்பு குறித்து விளக்கப்பட்டது.

ஏற்பாடுகளை அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகன்யா, உதவி மேலாளர் பொன் தமிழரசு செய்திருந்தனர்.

## க.பரமத்தியில் கால்நடை ஆராய்ச்சி மையம்: கால்நடை வளர்ப்போர் கோரிக்கை

க.பரமத்தி: க.பரமத்தி பகுதியை மையமாக கொண்டு, கால்நடை ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டும் என்று, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

கரூர் மாவட்டத்தில், மிகவும் பின்தங்கிய பகுதியாக க.பரமத்தி யூனியன் பகுதியில், காருடையாம்பாளையம், பரமத்தி, முன்னூர், நெடுங்கூர், குப்பம், ஆரியூர், தென்னிலை கிழக்கு மற்றும் மேற்கு, கோடந்தூர், மொஞ்சனூர் உள்ளிட்ட, முப்பது பஞ்சாயத்துகள் உள்ளன. இப்பகுதியில், ஆறு மற்றும் வாய்க்கால் பாசனம் இல்லாததால் பெரும்பாலும் மானவாரி பயிர்களையே விவசாயிகள் நம்பியுள்ளனர்.

கால்நடை மருத்துவமனை: இப்பகுதியில், 60 சதவீதத்திற்கும் மேற்பட்ட மக்கள், விவசாயம் மற்றும் விவசாயத்தை சார்ந்த கால்நடை வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இதில், வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளை வளர்த்து பராமரித்து வருகின்றனர். அவ்வாறு வளர்க்கும் கால்நடைகளுக்கு வாய்ப்புண், நீலநாக்கு நோய், துள்ளுமாறு நோய், அம்மை நோய் போன்ற நோய்கள் அதிக அளவு தாக்கப்படுகின்றன. அவ்வாறு தாக்குதலுக்கு ஆளாகும் ஆடுகளை, க.பரமத்தி யூனியன் பகுதியில், 10க்கும் மேற்பட்ட கால்நடை மருத்துவமனை மூலம் அந்தந்த கால்நடைகளுக்கு உட்பட்ட விவசாயிகள் சிகிச்சை அளித்து வருகின்றனர். ஆனால், கால்நடை மருத்துவமனைக்கு கொண்டு வந்து பரிசீலனை செய்து, அதற்கேற்ற வகையில் சிகிச்சை அளிக்க போதுமான வசதி எந்த மருத்துவமனையிலும் இல்லை. பரிசோதனைக்காக உட்படுத்தப்படும் ஆடுகளின் உடற்கூறுகளை பரிசோதனைக்காக அனுப்ப கரூர் மற்றும் நாமக்கல் கால்நடை ஆராய்ச்சி மையத்திற்கு

அனுப்பி, நோய்களை கண்டறிவதற்குள், இருக்கும் ஆடுகளை காப்பாற்ற முடியாமல், சில ஆடுகள் இறந்த விடுவதாக விவசாயிகள் புலம்புகின்றனர்.

இதுகுறித்து, கால்நடை விவசாயி கந்தசாமி கூறியதாவது: க.பரமத்தி யூனியன் பகுதியில் விவசாயி களின் வாழ்வதாரமே கால்நடைகளை நம்பியுள்ளனர். மழை மற்றும் கோடை காலங்களில் தாக்கப்படும் நோய்களை கண்டறிய போதிய வசதி. க.பரமத்தி கால்நடை மருந்தகத்தில் இல்லை.

நோய் கண்டறிய முடியல: இதனால், ஆடுகளுக்கு என்ன நோய் தாக்கப்பட்டுள்ளது என்று கண்டறிய முடியாமல், டாக்டர்கள் சிகிச்சை அளிப்பதால் சில சமயத்தில் குணமாவதில்லை. அதனால், இப்பகுதியில் கால்நடை ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். இதுகுறித்து, க.பரமத்தி கால்நடை மருத்துவமனை டாக்டர் தமிழரசன் கூறுகையில், "க.பரமத்தி யூனியன் அளவில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட செம்மறி ஆடுகள் உள்ளன. இவற்றிற்கென்று ஆராய்ச்சி மையம் அமைக்க கால்நடை பல்கலை முடிவு செய்ய வேண்டும். க.பரமத்தியை மையமாக கொண்டு கால்நடை ஆராய்ச்சி மையம் அமைத்தால், இப்பகுதியினர் பயனடைவர்," என்றார்.

## மண்வள அட்டை வழங்கல்: கூட்டத்தில் கலெக்டர் தகவல்

கரூர்: கரூர் மாவட்டம், தான்தோன்றிமலையில் வேளாண்மைத்துறை சார்பில், விவசாயிகளுக்கு மண்வள அட்டை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. அப்போது, கலெக்டர் ராஜேஷ் பேசியதாவது: விவசாயத்தின் அடிப்படை ஆதாரம் மண்வளமாகும். வளமான மண்ணே அதிக விளைச்சலுக்கு ஒரு அங்கமாக திகழ்ந்து விளங்குகிறது. எனவே, வேளாண்த்துறையின் மூலம் இணையதளம் துவக்கப்பட்டு அதில் மண்வளம் குறித்து பதிவு விவரங்கள் பெறப்பட்டு தேவையான கருத்துகளை விவசாயிகளுக்கு குறுஞ்செய்திகள் மூலம் வழங்கப்படுகிறது. இதன் அடிப்படையில்,

இரண்டு ஆண்டுகளில் மாவட்டத்தில், ஒரு லட்சத்து, 46 ஆயிரத்து, 56 பண்ணை குடும்பங்களுக்கு மண்வள அட்டை வழங்க திட்டமிட்டுள்ளது. எட்டு வட்டாரங்களில், 10,346 மண் மாதிரிகள் சேகரித்து சோதனை நடத்தப்பட்டது. அதில், 17 ஆயிரத்து, 59 விவசாயிகளுக்கு மண்வள அட்டை வழங்கப்பட்டுள்ளது. அதன்மூலம், தேவையான உரமிடுவதால் முழுமையான வளர்ச்சி பெறுவதுடன், வீணான உரச்செலவு குறைந்து மண்ணின் வளமும் பாதுகாக்கப்படுகின்றது. மாவட்டத்தில் கடந்த ஆண்டு, ஒரு லட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில், 1.5 லட்சம் மெ.டன் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அவர் பேசினார். நிகழ்ச்சியில், வேளாண்மை துறை இணை இயக்குனர் அல்தாப், துணை இயக்குனர்கள் மதனகோபால், சிவானந்தம், கலெக்டரின் நேர்முக உதவியாளார் (வேளாண்) ஜெயந்தி உட்பட பலர் பங்கேற்றனர்.

## காவிரி கரையோரம் நெல் கொள்முதல் தீவிரம்: பொன்னி மூட்டைக்கு ரூ.200 வரை அதிகரிப்பு

மேட்டூர்: காவிரி மற்றும் மேட்டூர் கால்வாய் பாசன பகுதிகளில் நெல் கொள்முதல் தீவிரமடைந்துள்ளது. கடந்த ஆண்டை விட, நடப்பாண்டு பொன்னி நெல் மூட்டைக்கு, 200 ரூபாய் வரை விலை அதிகரித்துள்ளது.

சேலம், நாமக்கல், ஈரோடு மாவட்டங்களில் காவிரி கரையோரம், மேட்டூர் கால்வாய் பாசனப்பகுதிகளில் கடந்த ஆகஸ்ட் மாதம், 45 ஆயிரம் ஏக்கரில் விவசாயிகள் நெல் சாகுபடி செய்தனர். மேட்டூர் அருகே கோல்நாயக்கன்பட்டி, நவப்பட்டி, செக்கானூர், பெரும்பள்ளம், பூலாம்பட்டி பகுதியில் பெரும்பாலான விவசாயிகள் பொன்னி நெல் அதிகளவில் சாகுபடி செய்தனர். தற்போது அறுவடை நடப்பதால், சேலம், ஈரோடு, தர்மபுரி, விழுப்புரம் உள்பட பல்வேறு மாவட்ட வியாபாரிகள் கால்வாய் பாசன பகுதியில் முகாமிட்டு நெல் கொள்முதல் செய்கின்றனர்.

செக்கானூர் விவசாயி நாகராஜ் கூறியதாவது: கடந்தாண்டு வியாபாரிகள், 65 கிலோ கொண்ட ஒரு மூட்டை பொன்னி நெல், 1,200 முதல், 1,260 ரூபாய் வரை கொள்முதல் செய்தனர். தற்போது ஒரு மூட்டை, 1,400 முதல், 1,450 ரூபாய் வரை கொள்முதல் செய்கின்றனர். கடந்த ஆண்டை விட நடப்பாண்டு பொன்னி நெல் ஒரு மூட்டை, 200 ரூபாய் வரை விலை அதிகரித்துள்ளது. பொன்னி அரிசி விரும்பி சாப்பிடுவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், அதற்கேற்ப தேவை அதிகரித்துள்ளது. விலை உயர்வுக்கு இதுவும் ஒரு காரணம். இவ்வாறு அவர் கூறினார்.

## உழவர் மன்ற அமைப்பாளர் பயிற்சி வகுப்பு

சங்ககிரி: சங்ககிரியில், சேலம் வேளாண்மை துறை பயிற்சி நிலையம் சார்பாக, வட்டார உழவர் மன்ற அமைப்பாளர்களுக்கு பயிற்சி வகுப்பு நடந்தது. சேலம் உழவர்பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் அருணா, சங்ககிரி வேளாண்மை உதவி இயக்குனர் அருள் ஆகியோர் வேளாண்மை திட்டங்கள், தொழில்நுட்பங்கள் குறித்து பேசினர். அட்மா தலைவர் பழனிசாமி உள்பட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## விவசாயிகள் வாழ்வுரிமை மாநாடு

பரமக்குடி: பார்த்திபனூரில் விவசாயிகள் வாழ்வுரிமை மாநாடு, சிறுதானிய உற்பத்தியாளர் கூட்டமைப்பு மாவட்ட செயலாளர் மலைராஜ் தலைமையில் நடந்தது. வட்டார செயலாளர் ராமு வரவேற்றார். காவிரி, வைகை, குண்டாறு இணைப்பு கால்வாய் விவசாயிகள் கூட்டமைப்பு மாநில பொதுச்செயலாளர் அர்ச்சுணன், தலைவர் மாரிமுத்து, விவசாயிகள் சங்க மாநில பொதுச்செயலாளர் ஆதிமூலம் பேசினர். ராமநாதபுரம், சிவகங்கை உள்ளிட்ட 7 மாவட்ட விவசாயிகள்

பயன்பெறும் விதமாக காவிரி, வைகை, குண்டாறு இணைப்பு கால்வாய் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். நிலம், நீர், காற்றை மாசுபடுத்தும் சீமை கருவேல மரங்களை ஒழிக்க வேண்டும். பராம்பரிய சிறுதானிய <<உற்பத்திக்கு ஊக்கம் அளிக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. விவசாயிகள் சங்க நிர்வாகி கண்ணப்பன் நன்றி கூறினார்.

## வெயிலின் தாக்கம் அதிகரிப்பு: இளநீர் விற்பனை சூடுபிடிப்பு

நாமக்கல்: நாமக்கல் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ள காரணத்தால் சாலையோர இளநீர் விற்பனை சூடுபிடித்துள்ளது.

குளிரின் தாக்கம் அதிகமான போதிலும், வெயிலின் அளவும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அதனால், வெயிலின் தாக்கத்தில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக, மக்கள் குளிர்பானங்களை வாங்கி அருந்தி வருகின்றனர். மேலும், இளநீர் போன்ற பானங்களை அதிக அளவில் மக்கள் வாங்கி அருந்தி, உடலின் சூட்டை குறைத்துக் கொள்கின்றனர். குறிப்பாக, செவ்விளநீர் மருத்துவ குணம் உள்ளதால், அதிக அளவில் அவற்றை வாங்கி பருகி வருகின்றனர்.

இதுகுறித்து, இளநீர் வியாபாரி முருகேசன் கூறியதாவது: பொள்ளாச்சி இளநீருக்கு மவுசு அதிகம் என்பதால், மக்கள் ஆர்வமுடன் வாங்கி சுவைக்கின்றனர். பிப்ரவரி முதல் ஏப்ரல் வரை வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும். அப்போது, மக்களை தாக்கும் பல்வேறு நோய்களில் இருந்து காத்துக் கொள்வதற்காக, இளநீர் அருந்துகின்றனர். மேலும் இளமைத்தோற்றம் பெறவும், அல்சர் பாதிப்பில் இருந்து பாதுகாக்கவும் இளநீர் மருந்தாக பயன்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### பிப். 9 முதல் கோழிகளுக்கு தடுப்பூசி முகாம்

சிவகங்கை மாவட்டத்தில் பிப். 9 முதல் 22 வரை கோழிக் கழிச்சல் நோய்க்கான தடுப்பூசி போடும் முகாம்கள் நடத்தப்பட உள்ளன.

இது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் சு. மலர்விழி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: வெயில் காலத்தில் கோழிகளுக்கு ஏற்படும் கழிச்சல் நோயை தடுக்கும் பொருட்டு சிவகங்கை மாவட்டத்தில் 2 கால்நடை மருத்துவமனைகள், 73 கால்நடை மருந்தகங்கள், 46 கால்நடை கிளை நிலையங்களில் தடுப்பூசி போடும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது. 1 லட்சத்து 40 ஆயிரம் கோழிகளுக்கு கழிச்சல் நோய் தடுப்பூசி போட திட்டமிடப்பட்டுள்ளது. இந்த தடுப்பூசியை பொதுமக்கள் தங்கள் கோழிகளுக்கு இலவசமாக போட்டுக்கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளார்.

### கம்பம் பள்ளத்தாக்கில் நெல் கொள்முதல் நிலையம் திறக்க கோரிக்கை

கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து பெரியாறு, வைகை பாசன 5 மாவட்ட விவசாயிகள் சங்கத் தலைவர் கே.எம்.அப்பாஸ் கூறியது: கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் 2-ஆம் போக நெல் அறுவடை விரைவில் தொடங்க உள்ளது. எனவே விவசாயிகளுக்கு போதிய விலை கிடைக்கும் வகையில், நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் கம்பம், உத்தமபாளையம், சின்னமனூர் ஆகிய பகுதிகளில் நெல் நேரடி கொள்முதல் நிலையங்களை திறக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## விவசாயிகளுக்கு முயல் வளர்ப்பு பயிற்சி

சிவகங்கை மாவட்டம் பிள்ளையார்பட்டியில் விவசாயிகளுக்கு திங்கள்கிழமை முயல் வளர்ப்பு பயிற்சி அளிக்கப்பட்டது.

பஞ்சாப் நேஷனல் வங்கியின் உழவர் பயிற்சி மையத்தில் நடைபெற்ற இப்பயிற்சி முகாமினை அதன் இயக்குனர் குறிஞ்சிநாதன் தலைமை வகித்து தொடக்கி வைத்தார். பயிற்றுனர் ராஜேஷ், முயல் வளர்ப்பு முறை, வியாபார ரீதியான வளர்ப்பு முறை, நோய் எதிர்ப்பு அறிகுறிகள், முயல் கூண்டு அமைத்தல், தட்ப வெப்பநிலை அறிந்து முயலைப் பராமரித்தல் ஆகியவை குறித்து விரிவாக எடுத்துக் கூறினார். இம்முகாமிற்கு சிவகங்கை, விருதுநகர், சிவகாசி, மதுரை, தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருப்பத்தூர், ஆகிய பகுதிகளிலிருந்து 50 -க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## முட்டை விலை ரூ.4

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.4, சென்னையில் ரூ.4.10.

கறிக்கோழி விலை: பல்லடம் பிராய்லர் ஒருங்கிணைப்புக் குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.64, முட்டைக்கோழி கிலோ ரூ.60.

## 1.5 லட்சம் மெட்ரிக் டன்னாக உணவு தானிய உற்பத்தியை உயர்த்த இலக்கு: ஆட்சியர்

உணவு தானிய உற்பத்தியை நிகழாண்டில் 1.5 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் டிபி. ராஜேஷ் தெரிவித்துள்ளார்.

ஆட்சியர் அலுவலக அரங்கில் வேளாண் துறையின் மூலம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விவசாயிகளுக்கான மண்வள அட்டை வழங்கும் நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து அவர் பேசியது:

விவசாயிகளின் வருமானம் 3 மடங்காக அதிகரிக்கவும், அவர்கள் பொருளாதார முன்னேற்றத்தில் சிறந்து விளங்கவும் தமிழக முதல்வர் பல்வேறு வகையான நலத் திட்டங்களை விவசாயிகளுக்கு வழங்கி வருகிறார்.

**விவசாயத்தின் அடிப்படை ஆதாரம் மண்வளம். வளமான மண்ணே அதிக விளைச்சலுக்கு ஒரு அங்கமாக திகழ்ந்து வருகிறது.**

முன்பெல்லாம் விவசாயிகள் தங்கள் வயல்களில் மண்ணை சேகரித்து பரிசோதனை நிலையம் மற்றும் நடமாடும் மண் பரிசோதனை நிலையத்துக்கு அனுப்பி ஆய்வுசெய்து மண்ணிலுள்ள சத்துக்கேற்றவாறு பயிர்களை தேர்வுசெய்து விவசாய பணிகளை மேற்கொள்வர்.

இந்த நிலையை மாற்றி வேளாண் துறையின் மூலம் இணையதளம் தொடங்கப்பட்டு, அதில் மண்வளம் குறித்து பதிவு விவரங்கள் பெறப்பட்டு தேவையான கருத்துகளை விவசாயிகளுக்கு குறுஞ்செய்திகள் வழியாக வழங்க பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது இத்திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தில் அனைத்து விவசாயிகளும் பயன்பெறும் வகையில் மண்வள அட்டை வழங்க பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கரூர் மாவட்டத்தில் 1,46,056 பண்ணை குடும்பங்களுக்கு மண்வள அட்டை வழங்க திட்டமிட்டு, 2015-16-ம் ஆண்டு 8 வட்டாரங்களில் 8,284 மண் மாதிரிகள் சேகரித்து 59,226 பண்ணை குடும்பங்களுக்கு மண்வள அட்டை வழங்கவும், 2016-17-ம் ஆண்டு 12,972 மண் மாதிரிகள் சேகரித்து, 86,825 பண்ணை குடும்பங்களுக்கு மண்வள அட்டை வழங்கவும் திட்டமிட்டு, முதல் கட்டமாக 10,346 நபர்களுக்கு இன்று மண்வள அட்டை வழங்கப்படுகிறது.

நிர்ணயிக்கப்பட்ட இலக்கைவிட 124.89% சாதனை மேற்கொண்டு மாநில அளவில் கரூர் மாவட்டம் மண்வள அட்டை வழங்குவதில் சிறப்பிடத்தை பெற்றுள்ளது.

கரூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டு ஒரு லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. நிகழாண்டுக்கு இத்திட்டத்தை

பயன்படுத்துவதன் மூலம் 1.5 லட்சம் மெட்ரிக் டன்னாக அதிகரிக்கப்பட உள்ளது என்றார் ஆட்சியர்.

முன்னதாக, வேளாண் துறை மூலம் மண் பரிசோதனையால் உண்டாகும் பயன் குறித்து அமைக்கப்பட்ட கண்காட்சியை ஆட்சியர் பார்வையிட்டார். பிறகு, விவசாயிகளுக்கு மண்வள அட்டையை வழங்கியதுடன், 2 பயனாளிகளுக்கு தலா 97,500 ரூபாயில் ரோட்டவேட்டர் கருவிகளும், ஒருவருக்கு ரூ. 5,18,271 மதிப்பீட்டில் டிராக்டர், 2 பேருக்கு தலா ரூ. 1.81 லட்சத்தில் பவர்டில்லர் எந்திரங்கள் என 14 பயனாளிகளுக்கு ரூ. 10.75 லட்சத்தில் பல்வேறு உபகரணங்களை ஆட்சியர் வழங்கினார்.

நிகழ்ச்சியில், வேளாண்மைத் துறை இணை இயக்குநர் அல்தாப், துணை இயக்குநர்கள் மதனகோபால், சிவானந்தம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஜெயந்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## "சிறு தானியப் பயிரை ஊக்குவிக்க நடவடிக்கை'

திருவாரூர் மாவட்டத்தில் சிறு தானியப் பயிர்களை ஊக்குவிக்க மாநில அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்று மாநில திட்டக்குழுத் துணைத் தலைவர் சாந்தா ஷீலாநாயர் கூறினார்.

திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரி அருகில் விஸ்வநாதபுரத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வயல் தின விழாவில் அவர் பேசியது:

திருவாரூர் மாவட்டத்தில் சிறு தானியப் பயிர் சாகுபடியை ஊக்குவிப்பது உள்ளிட்ட பல்வேறு துறைகளின் வளர்ச்சிப் பணிக்கு மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியிலிருந்து ரூ. 1 கோடி நிதி ஒதுக்கப்பட்டது.

அதனடிப்படையில், டெல்டா மாவட்டங்களில் சிறு தானியப் பயிர்களை சாகுபடி செய்தல் மற்றும் சிறுதானியங்களை மதிப்புக் கூட்டல் தொடர்பான திட்டம் கொரடாச்சேரி அருகே விஸ்வநாதபுரத்தில் செயல்படுத்த ரூ. 16.15 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

திட்டத்தில் குதிரைவாலி சிறு தானியத்தை உற்பத்தி செய்ய 20 பயனாளிகள் தேர்ந்தெடுத்து 20 ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, முதல் கட்டமாக 12 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு விதைகள் வழங்கப்பட்டுள்ளன.

குதிரைவாலி வறட்சியைத் தாங்கி வளரும் பயிராகும். இதை உற்பத்தி செய்ய குறைந்த தண்ணீரே போதும் என்றாலும் தண்ணீர் தேங்கியிருந்தாலும் விளைச்சல் பாதிக்காது.

இத் திட்டத்தின் மூலம் சிறுதானியங்களை மதிப்புக் கூட்டுவதற்குத் தேவையான கருவிகளும் வழங்கப்பட்டு அவற்றை பிஸ்கட் மற்றும் இதர மதிப்புக்கூட்டப்பட்ட பொருள்களாக மாற்றி விற்பனை செய்ய இருப்பதால் விவசாயிகள் அதிக லாபம் பெறலாம்.

பெண்கள் விவசாயத்தில் முழுமையாக ஈடுபட வேண்டுமென்பதே திட்டத்தின் நோக்கம். சிறு தானியங்களை பள்ளி குழந்தைகள் உணவில் சேர்த்துக் கொண்டால் புத்திக் கூர்மைக்கு மிகவும் நல்லது என்றார் சாந்தா ஷீலா நாயர். விழாவில் மாவட்ட ஆட்சியர் எம். மதிவாணன், வேளாண் இணை இயக்குநர் க. மயில்வாகணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## நாகர்கோவிலில் இன்று வேளாண் திட்டக் கூட்டம்

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மாவட்ட வேளாண்மை திட்டம் தயாரிக்கும் கூட்டம் புதன்கிழமை (பிப். 3) மாலை 5 மணிக்கு மாவட்ட ஆட்சியரக நாஞ்சில் கூட்ட அரங்கில் நடைபெறுகிறது.

மாவட்ட ஆட்சியர் சஜ்ஜன் சிங் ரா.சவாண் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, கால்நடைப் பராமரிப்புத்துறை, பட்டுவளர்ச்சித்துறை, மீன்வளத்துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, கூட்டுறவுத்துறை, வனத்துறை, பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பு, மாவட்ட ஊராட்சி, நபார்டு வங்கி, முன்னோடி வங்கி, டான்பெட், ஆவின், ரப்பர் வாரியம்,

விதைச்சான்றுத்துறை ஆகிய துறைகள் பங்கேற்கின்றன. மேலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும், தனியார் தொண்டு நிறுவன பிரதிநிதியும் கலந்துகொள்கின்றனர் என்று மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வேளாண்மை)எம்.நிஜாமுதீன் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**திருக்கை, செம்பரா மீன்கள் வரத்து அதிகரிப்பு**

3 நாள்கள் வேலை நிறுத்தப் போராட்டத்துக்குப் பிறகு, கடலுக்குச் சென்ற மீனவர்கள் வலையில் திருக்கை, செம்பரா, சுறா மீன்கள் அதிக அளவில் சிக்கியதால் அவர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இதனால், காரைக்கால் மீன்பிடி துறைமும் களைகட்டியுள்ளது.

இலங்கை கடற்படை பறிமுதல் செய்த தமிழகம் மற்றும் காரைக்கால் பகுதி மீனவர்களின் 76 விசைப்படகுகளை விடுவிக்கக் கோரி ஜனவரி 27-ஆம் தேதி முதல் 3 நாள்களுக்கு விசைப் படகுகளை நிறுத்திப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், மீன்வரத்து வெகுவாகப் பாதிக்கப்பட்டது.

போராட்டம் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து, ஜனவரி 30-ஆம் தேதி முதல் காரைக்காலில் இருந்து சுமார் 200-க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கடலுக்குச் சென்றன. இப்படகுகளில் 3 நாள்கள் கடலில் தங்கி மீன்பிடித்த மீனவர்களின் படகுகள் செவ்வாய்க்கிழமை அதிகாலை காரைக்கால் துறைமுகத்துக்கு திரும்பின.

இந்தப் படகுகளில் ஏற்றுமதி தரம் வாய்ந்த வஞ்ஜிரம், கொடுவா, பாறை மீன்கள் இருந்தன. மேலும், திருக்கை வகைகளும், சிறிய சுறா மீன்களும் அதிக அளவில் சிக்கியிருந்தன.

இதனால், வெளியூரிருந்து வந்திருந்த முகவர்கள் ஆர்வமுடன் மீன்களை ஏலத்தில் எடுத்தனர். பின்னர் அந்த மீன்களை உரிய முறையில் ஐஸ் கட்டிகளுடன்கூடிய பெட்டிகளில் அடைத்து, எர்ணாகுளம் விரைவு ரயில் மூலம் கேரளாவுக்கு கொண்டுச் சென்றனர்.

உள்ளூர் மீன் வியாபாரிகளும் திரளாக துறைமுகத்துக்கு வந்திருந்து, விற்பனைக்காக மீன்களை வாங்கிச் சென்றனர். மீன்வரத்து அதிகரித்துள்ளதால் மீனவர்கள் மட்டுமின்றி, வியாபாரிகளும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கடந்த சில நாள்களாக மீன்வரத்து குறைவாக இருந்ததால் அதன் விலை அதிகரித்தது. தற்போது மீன்கள் வரத்து அதிகரித்துள்ளதால், விலை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## ஐம்படை கிராமத்தில் பயிர் கடன் சிறப்பு முகாம்

திருக்கோவிலூர், : மணலூர்பேட்டை பாரத ஸ்டேட் வங்கி கிளை மேலாளர் ரமேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மணலூர்பேட்டை பாரத ஸ்டேட் வங்கி கிளை சார்பில் நாளை(4ம் தேதி) காலை 9 மணிக்கு ஐம்படை ஊராட்சி ஒன்றிய நடு நிலைப்பள்ளியில் பயிர்க்கடன் புதுப்பிக்கும் சிறப்பு முகாம் நடைபெறுகிறது. கடந்த சில வருடங்களாக ஏற்பட்ட கடும் வறட்சி உள்ளிட்ட விவசாய மகசூல் பிரச்னைகளால், வங்கியில் டிராக்டர் மற்றும் விவசாய இயந்திரங்கள் கடன், கரும்பு, நெல் பயிர் கடன் பெற்று குறிப்பிட்ட தவணைக்குள் திருப்பி செலுத்த இயலாத சூழலில் இருக்கும் வராக்கடன் வாடிக்கையாளர்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்படுத்தும் வகையில் ஒரே தவணையில் தீர்வு, வட்டி சலுகை மற்றும் பயிர்க்கடன் புதுப்பிக்கும் சிறப்பு முகாம் நடைபெறுகிறது.

சம்பந்தப்பட்ட அனைத்து கிராம வாடிக்கையாளர்களும் முகாமில் கலந்து கொண்டு இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்வதோடு, கரும்பு, நெல் வேர்க்கடலை, உளுந்து, மக்காசோளம் சாகுபடி செய்யும் விவசாயிகள் புதிய சிட்டா, அடங்கல் உள்ளிட்ட நில ஆவணங்கள்

எடுத்து வந்து தங்களது பழைய பயிர்க்கடன்களை புதுப்பித்தும், புதிய பயிர்க்கடன்களை பெற்று பயனடையலாம். முகாமில், ஒரே கவணையில் பணத்தை முழுவதும் திருப்பி செலுத்தி தீர்வு பெற முன்வருபவர்களுக்கு கூடுதல் வட்டி சலுகை வழங்கப்படும்.

## கோழிக்கழிச்சல் நோய்க்கு 9ம்தேதி முதல் தடுப்பூசி முகாம்

கரூர், : கரூர் மாவட்டத்தில் வரும் 9ம் தேதி முதல் 22ம் தேதி வரை இருவாரம் கோழிக்கழிச்சல் நோய் தடுப்பூசிமுகாம் நடை பெறவுள்ளது. ராணிப்பேட்டை கால்நடைநோய்தடுப்பு மருந்து நிலையத்தில் இருந்து 1.40 லட்சம் டோஸ்கள் தடுப்பூசி மருந்து பெற்று பயன்பாட்டிற்காக இருப்பு வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் அவர்களது பகுதியில் உள்ள கால்நடை கிளை நிலையங்கள், கால்நடை மருந்தகங்களில் தங்களது கோழிகளுக்கு தடுப்பூசி போட்டுக் கொள்ளவும், கால்நடை பராமரிப்புத்துறையினரால் மேற்கொள்ளப்படும் முகாமை பயன்படுத்திக்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இந்நோயைக் கட்டுப்படுத்த தடுப்பூசி போடுதல் அவசியம். எனவே பொதுமக்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு அளித்து தடுப்பூசிபோட்டு பயன்பெறுமாறு கலெக்டர் ராஜேஷ் தெரிவித்துள்ளார்.

## நடப்பாண்டில் 1.5 லட்சம் டன் உணவு தானிய உற்பத்திக்கு இலக்கு

கரூர், : கரூர் மாவட்டத்தில் நடப்பாண்டில் 1.5 லட்சம் டன் உணவு தானியம் உற்பத்திக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வேளாண்மைத்துறையின் மூலம் விவசாயிகளுக்கு மண்வள அட்டை வழங்கும் நிகழ்ச்சி தாந்தோணிமலையில் நடைபெற்றது. மண்பரிசோதனை குறித்த கண்காட்சியை பார்வையிட்டு கலெக்டர் ராஜேஷ் தலைமை வகித்துபேசினார். அவர் பேசியது: மண்ணில் அனைத்து சத்துக்களும் இருப்பதை அறிந்து அதற்கேற்ப உரங்களை பயன்படுத்தி வேளாண்உற்பத்தி பொருட்களை இருமடங்கு அதிகரித்து பயன்பெறலாம். கரூர் மாவட்டத்தில் 1லட்சத்து 46ஆயிரத்து56 பண்ணை குடும்பங்களுக்கு மண்வள அட்டை வழங்க திட்டமிட்டு 8வட்டாரங்களில்

8284மண்மாதிரிகள் சேகரித்து 59ஆயிரத்து226 பண்ணை குடும்பங்களுக்கு மண்வளஅட்டை வழங்கவும், நடப்பாண்டில் 12972 மண்மாதிரிகள் சேகரித்து 86825 பண்ணைகுடும்பங்களுக்கு மண் வள அட்டை வழங்கவும் திட்டமிட்டு முதல்கட்டமாக 10ஆயிரத்து346 பேருக்கு இப்போது வழங்கப்பட்டுள்ளது. நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட 124சதவீதம் சாதனையாக மாநில அளவில் கரூர் மாவட்டம் மண்வள அட்டை வழங்குவதில் முதலிடத்தை பெற்றுள்ளது. மற்ற விவசாயிகளுக்கும் படிப்படியாக மண்வள அட்டை வழங்கப்படும். விண்ணப்பித்த விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மைஉதவி அலுவலரையோ, பஞ்சாயத்து யூனியன் வளாகத்தில் உள்ள வேளாண் விரிவாக்க மையம் அல்லது வேளாண்மை விரிவாக்க அலுவலகத்தையோ தொடர்புகொண்டு பதிவு செய்து கொள்ளவேண்டும். இதனால் பயிர் முழுமையான வளர்ச்சி பெறுவதுடன் தேவையற்ற உரச்செலவு குறைந்து மண்ணின் வளமும் பாதுகாக்கப்படுகிறது. இத்திட்டத்தில் அதிகஅளவுஉணவு உற்பத்தியில் சாதனை படைக்கும் விவசாயிக்கு அரசு விருது வழங்குகிறது. கரூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டு 1 லட்சம் டன் உணவு தானிய உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தை பயன்படுதுவதன் மூலம் நடப்பாண்டில்1.5லட்சம் டன் ஆக அதிகரிக்கப்படஉள்ளது. கடந்த ஆண்டு இத்திட்டத்தில் விவசாயி வீரம்மரெட்டியார் ஒரு எக்டேர் நிலத்தில் 2240கிலோ துவரை மகசூல் எடுத்து தேசிய அளவில் சாதனைபடைத்து பிரதமரிடம் பரிசுபெற்றுள்ளார் என்றார். 2விவசாயிக்கு ரோட்டவேட்டர்கருவி, ஒருவருக்கு டிராக்டர், 2பேருக்கு பவர்டில்லர், 2 பேருக்கு சீட்ஸ்பொருட்கள், 7 பேருக்கு பயறுவகை விதைபொருட்கள் என 14 பேருக்கு ரூ.10லட்சத்து 75ஆயிரம் மதிப்பிலான நலத்திட்டங்களை வழங்கினார். நிகழ்ச்சியில் வேளாண்மை இணை இயக்குனர் அல்தாப், துணைஇயக்குனர்கள் மதனகோபால், சிவானந்தம், அலுவலர் ஜெயந்தி, உதவிஇயக்குனர் ஷோபனா, மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

## வேளாண், பொறியியல், தோட்டக்கலைத்துறை செயல்திட்ட ஆலோசனை கூட்டம்

கரூர், : தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் கரூர் மாவட்டத்தில் வேளாண்மைத்துறை, வேளாண்பொறியியல் துறை, தோட்டக்கலைத்துறை சார்ந்த செயல் திட்டம் தயாரித்தல் குறித்த சிறப்பாய்வுக் கூட்டம் கலெக்டர் ராஜேஷ் தலைமையில் நடைபெற்றது. இதில் கலெக்டர் பேசியது: விவசாயிகளுக்கு தேவையான வேளாண்உபகரணங்கள், பயன்படுத்தும் முறை போன்றவற்றை வேளாண்பொறியியல் துறை பயிற்சியுடன் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இது போல் தோட்டக்கலைத்துறை விவசாய நில பகுதியில் தண்ணீர் தேவையறிந்து மிக குறைந்த அளவு நீரில் சொட்டுநீர் பாசன முறையில் அதிக மகசூல் பெறும் பயிர் வகைகளை பயிரிட அறிவுறுத்துவதுடன் மானியத்திட்டங்களை எடுத்துக்கூறி செயல்பட வேண்டும். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக விஞ்ஞானிகள் விவசாய நிலப்பகுதிகளின் மண்ணின் தன்மையை எடுத்துரைத்து அதற்கேற்ற பயிர்வகைகளை பயிரிட ஆலோசனை வழங்க வேண்டும். இணைத்தொழில் அமைத்திடும் வகையில் விவசாயிகளுக்கு கால்நடை பராமரிப்புத்துறை, பட்டுவளர்ப்புத்துறை, மீன்வளத்துறை, வனத்துறை போன்றவற்றுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு விவசாயிகள் வேளாண் உற்பத்தியிலும், இணை தொழிலும் சாதனை படைக்க உறுதுணையாக இருக்க வேண்டும் என்றார். கூட்டத்தில் டிஆர்ஓ அருணா, வேளாண்மை இணை இயக்குனர் அல்டாப், துணைஇயக்குனர்கள் மதனகோபால், சிவானந்தம், தோட்டக்கலைத்துணை இயக்குனர் முனியாண்டி, வேளாண்அலுவலர் ஜெயந்தி மற்றும் அரசுஅலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## நபார்டு வங்கி மண்டல அதிகாரி விசுவக்குடி அணையில் ஆய்வு கூடுதல் நிதி வழங்க உறுதி

பெரம்பலூர்,: விசுவக்குடி கல்லாறு அணைக்கட்டுப் பகுதியை நபார்டு வங்கியின் சென்னை மண்டல துணைப்பொது மேலாளர் உடுபா நேரில்

ஆய்வு செய்தார். கூடுதல் நிதி கேட்டு பரிந்துரைத்தால் வழங்கப்படுமென உறுதியளித்தார். பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டைதாலுகா, அன்னமங்கலம், தொண்டமாந்துறை இடையே கல்லாற்றின் குறுக்கே விசுவக்குடி அணைக்கட்டு அமைக்கப்பட்டுள்ளது. பொதுப்பணித்துறையின் நீர்வளஆதார அமைப்பின் மூலமாக செம்மலை, பச்சைமலை ஆகிய 2 மலைக்குன்றுகளை இணைத்து ரூ.19 கோடியில், 665 மீட்டர் நீளமுள்ள கரையுடன் பிரமாண்ட அணைக்கட்டு கட்டும் பணி 2014 இறுதியில் தொடங்கியது. பின்னர் மறுமதிப்பீட்டின்படி ரூ14.07 கோடிக்கு கூடுதலாக பரிந்துரைக்கப்பட்டு மொத்தம் ரூ33.07 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும் ரூ.3.30 கோடி மதிப்பீட்டில் உட்புறத்தை ஆழப்படுத்தி, பிரமாண்ட ரேடியல் ஷட்டர்கள் அமைத்து, மொத்தம் ரூ.36.37 கோடியில் கட்டுமானப்பணிகள் 99 சதவீதம் முடிவடைந்துள்ளன. 200 மீட்டர் வாய்க்கால் அமைக்கும்பணிகள் மட்டுமே பாக்கியுள்ளது. விசுவக்குடி கல்லாறு அணைக்கட்டு மூலம் 40.67 மில்லியன் கனஅடிநீரை சேமிக்க முடியும். 33 அடி உயரத்திற்கு தண்ணீர் தேங்கி நிற்கும் திறனுள்ள அணையில், கடந்த நவம்பர் இறுதியில் பெய்த கனமழை காரணமாக 25 அடி உயரத்திற்கு, அதாவது 7.5 மீட் டர் உயரத்திற்குத் தண்ணீர் தேக்கிவைக்கப்பட்டது. 40.67 மில்லியன் கனஅடி கொள்ளளவு கொண்ட அணையில் 23 மில்லியன் கனஅடி தண்ணீர் நிரம்பியது குறிப்பிடத்தக்கது. கனமழையின்போது கல்லாற்றில் பெருக்கெடுக்கும் வெள்ளப்பெருக்கு வெள்ளாற்றில் பாய்ந்து கடலூர் வழியாகக் கடலுக்குச்சென்று வீணானது. அதனை வேளாண்மைக்குப் பயன்படுத்தவே இந்த புதியஅணைக்கட்டு அமைக்கப்பட்டது. வேளாண் வசதிக்காக அமைக்கப்பட்ட இந்த அணைக்கட்டு தற்போது பெரம்பலூர் மாவட்டத்தின் பிரதான சுற்றுலாத்தலமாக உருவெடுத்து வருகிறது. இந்த அணைக்கட்டு அமைவதற்காக முதன்முறையாக அரசாணை பிறப்பித்து திட்ட மதிப்பீட்டுத் தொகையாக அறிவிக்கப்பட்ட ரூ.19 கோடியை வழங்கியது நபார்டு வங்கிதான். இந்நிலையில் நேற்று நபார்டு வங்கியின் சென்னை மண்டல துணைப் பொதுமேலாளர் உடுபா என்பவர் நேரில் வந்து விசுவக்குடி அணைக்கட்டின் கட்டுமானப்பணிகளை பெரம்பலூர் லெக்டர் நந்தக்குமாருடன் சேர்ந்து

பார்வை யிட்டு ஆய்வு செய்தார். அணையின் பாதுகாப்பு, தண்ணீரைச் சேமிக்கும் திறன், பாசன வசதிகளை விசாரித்த உடுபா, அணையின் கட்டுமானப்பணிகளைப் பாராட்டினார். மேலும், அணைக்கட்டுக்கான இதரக் தேவைகளுக்காகவோ, மாவட்டத்தின் வேறு சில கிட்டப் பணிகளுக்காகவோ நபார்டு வங்கியிடம் கூடுதல் நிதியுதவி கேட்டு பரிந்துரைத்தால் நிச்சயம் வழங்கப்படும் என உறுதியளித்தார். நிகழ்ச்சியின்போது, நபார்டு வங்கியின் மாவட்டவளர்ச்சி அலுவலர் நவின்குமார், பொதுப்பணித் துறையின் செயற்பொறியாளர் (அரியலூர்)தெய்வீகன், உதவிசெயற்பொ றியாளர் வேல்முருகன், உதவிப்பொறியாளர் கார்த்திக், தமிழகவிவசாயிகள் கட்சித் தலைவர் ராமராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

## பயிர்களில் பூச்சிகளை கண்டதும் பூச்சிக்கொல்லி தெளிக்கக் கூடாது

பட்டுக்கோட்டை,: பயிர்களில் பூச்சிகளை கண்டதும் பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்கக் கூடாது என்று விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.அட்மா கிட்டத்தின் கீழான விரிவாக்க கிட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் பண்ணைப்பள்ளி பயிற்சி பட்டுக்கோட்டை அடுத்த காரியாவிடுதி கிராமத்தில் நடைபெற்றது.

இதில் ரசாயனம் அல்லாத சாகுபடி தொழில்நுட்பங்களை எவ்வாறு கடைபிடிப்பது, காற்று, நீர், நிலத்தை மாசுபடாமல் காப்பது என்பது குறித்து வேளாண்மைத்துறை வல்லுநர்கள், பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கருவிகள் மற்றும் வயல்வெளி செய்முறை செயல் விளக்கம் மூலமும் விளக்கப்பட்டது. இப்பயிற்சியில் நெல்லில் பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய பூச்சி இனங்களான குருத்துப்பூச்சி, இலைசுருட்டுப்பூச்சி, கத்துப்பூச்சி வகைகள், கதிர்நாவாய்பூச்சி போன்ற தீமை செய்யும் பூச்சிகளை கவர்ந்து இழுக்கக்கூடிய மஞ்சள் நிற பூக்களை தருகின்ற செண்டிப்பூ, செவந்திப்பூ, வெண்டி, உளுந்து, எள், கட்டைப்பயறு ஆகிய பயிர்களை வயல் வரப்புகளில் விதைப்பு செய்யும் தொழில்நுட்பம் அனைத்து விவசாயிகளின் வயல்களிலும் கடைபிடிக்கப்பட்டது.

நன்மை செய்யும் பூச்சிகளான சிலந்தி, ஊசித்தட்டான், பொறிவண்டு, தரைவண்டு ஆகிய பூச்சிகளும் பூக்களின் வாசனைக்கு கவர்ந்திழுக்கப்பட்டு தீமை செய்யும் பூச்சிகளை தின்று அழிப்பது குறித்து விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. கடைசி நாள் பயிற்சியில் இலையை தின்றும், சாறினை உறிஞ்சியும் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய பூச்சியின் தாக்குதல் சேத விபரங்களை கண்டறிவதற்கும் தண்டுகளை தாக்கி அழிக்கும் குருத்துப்புழு, குருத்து ஈ, புகையான் ஆகிய பூச்சிகளின் சேத விபரங்களை கண்டறிவதற்கும், இலைவெட்டு மற்றும் கிளைவெட்டு பரிசோதனைகள் அமைக்கப்பட்டிருந்த திடல்களில் அறுவடை நடத்தி வயல்தினவிழாநடத்தப்பட்டது.

பூச்சிகளை கண்டதுமே ரசாயன பூச்சிக் கொல்லி மருந்து தெளிக்கக் கூடாது என்று விவசாயிகளுக்கு வலியுறுத்தப்பட்டது. வயல்தினவிழா முடிவில் பயிற்சியில் கலந்து கொண்ட 25 விவசாயிகளுக்கும் பயிற்சி உபகரணங்கள் அடங்கிய கிட்பேக், தலைக்கவசம் (தொப்பி) மற்றும் நன்மை தீமை பூச்சிகள் பற்றிய வண்ண விளக்கப் படங்களுடன் கூடிய தொழில்நுட்ப கையேடு ஆகியன விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. பயிற்சியில் திருவோணம் வேளாண் உதவி இயக்குநர் மதியரசன், ஒரத்தநாடு கால்நடை மருத்துவக்கல்லூரி உழவியல்துறை உதவிப் பேராசிரியர் செந்தில்குமார், திருவோணம் வேளாண்மை அலுவலர் முருகேசன், ஒன்றியக்குழுத் தலைவர் ராமாமிர்தம் ராஜமாணிக்கம், ஊராட்சி தலைவர் தமிழ்ச்செல்விவயல்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை வேளாண்மை உதவி அலுவலர் சரவணன், அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் மேனகா, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ரெத்தினம் மற்றும் நெடுஞ்செழியன் செய்திருந்தனர்.

## காரைக்காலில் 5ம் தேதி முதல் மலர், காய்கனி கண்காட்சி துவக்கம் அரங்கு அமைக்கும் பணி மும்முரம்

காரைக்கால், : காரைக்காலில் வரும் 5ம் தேதி முதல் மலர், காய்கனி

கண்காட்சி துவங்குகிறது. இதையொட்டி மாவட்ட வேளாண்துறை சார்பில் அரங்குகள் அமைக்கும் பணி நடந்து வருகிறது. காரைக்கால் நகராட்சி திடலில் மாவட்ட வேளாண்துறை சார்பில் 17வது மலர், காய்கனி கண்காட்சி வரும் 5ம் தேதி துவங்கி 7ம் தேதி வரை நடக்கிறது. இந்த கண்காட்சிக்காக புதுச்சேரி அரசு ரூ.25 லட்சம், தனியார்த்துறை பங்களிப்பு ரூ.5 லட்சம் என மொத்தம் ரூ.30 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கண்காட்சிக்காக பிரமாண்ட பச்சைநிற வலையிலான பந்தல், அரசுத்துறை மற்றும் வியாபாரிகளின் அரங்குகள் அமைக்கும் பணியை மாவட்ட கூடுதல் வேளாண்துறை இயக்குனர் மதியழகன் ஆய்வு செய்தார். இதைதொடர்ந்து அவர் நிருபர்களிடம் கூறியதாவது: புதுச்சேரி வேளாண்துறை சார்பிலான மலர், காய்கனி கண்காட்சி சமீபத்தில் நடந்து முடிந்தது. இதைதொடர்ந்து காரைக்காலில் கண்காட்சி நடைபெறவுள்ளது. கண்காட்சிக்காக பெங்களூரு, புனே, ஐதராபாத், ஊட்டி உள்ளிட்ட பகுதிகளிலிருந்து மலர், அங்காரம் மற்றும் காய்கறி செடிகள், பழங்கள் வரவழைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு வரும் செடிகளை வாடாமல் இருக்க இந்த பச்சைவண்ண பந்தல் அமைக்கப்படுகிறது. இன்று மாலை முதல் செடிகள் வரத் துவங்கிவிடும். கண்காட்சியில் கொய்மலர் அங்கார செடிகள், தானியம் காய்கறி செடிகள், மருந்து மற்றும் மனமூட்டும் செடிகள், அழகு தோட்டம், வீட்டு காய்கறி தோட்டம், பழத்தோட்டம் உள்ளிட்ட போட்டிகள் நடத்தப்பட்டு விழாவின் இறுதி நாள் பரிசு வழங்கப்படவுள்ளது. அதேபோல் இறுதிநாளன்று 50 முதல் 75 சதவீதம் மாணியத்தில் செடிகள் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாலை நேரத்தில், பள்ளி, கல்லூரி மற்றும் தனியார் பங்களிப்போடு கலைநிகழ்ச்சிகள் நடக்கிறது என்றார்.

## விதைக்கான நெல் ரகத்தை தனித்தனியே அறுவடை செய்ய அறிவுறுத்தல்

சிவகங்கை, : சிவகங்கை மாவட்டத்தில் விதைப்பண்ணை அமைத்த விவசாயிகள் விதைக்கான நெல் ரகங்களை தனித்தனியே அறுவடை செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. விதைச்சான்று உதவி

இயக்குநர் லட்சுமிபிரபா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது: சிவகங்கை மாவட்டத்தில் நடப்பாண்டு 360 ஏக்கரில் நெல் விதைப்பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. தற்போது சில பகுதிகளில் நெல் அறுவடை நடந்து வருகிறது. நெல் ரகங்களை தனித்தனியே அறுவடை செய்ய வேண்டும். இயந்திரம் மூலம் அறுவடை செய்தால் இயந்திரத்தை நன்கு சுத்தம் செய்ய வேண்டும்.

இயந்திரம் மூலம் ஒரு ரகத்தை அறுவடை செய்து முடித்து அடுத்த ரகத்தை அறுவடை செய்யும் போது முதல் மூன்று அல்லது நான்கு மூடைகளை விதைக்காக வைக்காமல் பிற தேவைக்கு வைத்துக்கொள்ளலாம். அறுவடை முடிந்த மூன்று நாட்களுக்குள் முதல் காய்ச்சல் போட்டு நெல்லின் ஈரப்பதத்தை குறைக்க வேண்டும். விதைகளை புதிய சாக்குகளில் சேமிக்க வேண்டும். நன்கு காயவைத்து, சுத்தம் செய்து வயல் மட்ட விதைகளை தயார் செய்ய வேண்டும். பின் விதைக்குவியலில் இருந்து விதை மாதிரி எடுக்கப்பட்டு விதைப் பரிசோதனை செய்யப்படும். பகுப்பாய்வில் தேறிய விதைக்குவியல்களில் சான்றட்டை பொருத்தப்படும். சான்று விதை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு நல்ல கொள்முதல் விலை கிடைப்பதோடு, விநியோக மானியமும் கிடைக்கும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய வேளாண் செய்திகள்

**வேளாண்மைத்துறை திட்டமிட்டு செயல்பட வேண்டும் விவசாயிகள் பொருளாதார முன்னேற்றம் பெறும் வகையில் கலெக்டர் ராஜேஷ் பேச்சு**



விவசாயிகள் பொருளாதார முன்னேற்றம் பெறும் வகையில் வேளாண்மைத்துறை திட்டமிட்டு செயல்பட வேண்டும் என்று மாவட்ட கலெக்டர் ராஜேஷ் பேசினார்.

சிறப்பாய்வுகூட்டம்

கரூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் கரூர் மாவட்டத்தில் வேளாண்மைத்துறை மற்றும் வேளாண் பொறியியல் துறை, தோட்டக்கலைத்துறை சார்ந்த

செயல் திட்டம் தயாரித்தல் குறித்த சிறப்பாய்வு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் ராஜேஷ் தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் பேசியதாவது:- தமிழக முதல்- அமைச்சர் ஜெயலலிதா உணவு உற்பத்தியில் 2-ம் பசுமை புரட்சியை ஏற்படுத்தும் விதமாக பல்வேறு வகையான நலத்திட்டங்கள் அறிவித்து அத்திட்டங்கள் அனைத்தையும் முழுஅளவில் செயல்படுத்தி வருகிறார். அரசின் திட்டங்களை விவசாயிகள் நூறு சதவீதம் பெற்று பொருளாதார முன்னேற்றம் பெறும் வகையில் வேளாண்மைத்துறை திட்டமிட்டு செயல்பட வேண்டும். அதுமட்டும் இன்றி விவசாயிகளுக்கு தேவையான வேளாண் உபகரணங்கள் மற்றும் பயன்படுத்தும் முறை போன்றவற்றை வேளாண் பொறியியல் துறை பயிற்சியுடன் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

மண்ணின்தன்மை

இதேபோல் தோட்டக்கலைத்துறை விவசாய நில பகுதியில் தண்ணீர் தேவையை அறிந்து மிக குறைந்த அளவு தண்ணீரில் சொட்டுநீர் பாசனமுறையில் அதிக மகசூல் பெறுகின்ற பயிர்வகைகளை பயிரிட அறிவுறுத்துவதுடன் விவசாயிகளுக்கு உறுதுணையாக இருந்து மானியத்தில் வழங்கும் திட்டங்களை எடுத்துரைத்து திட்டங்கள் விவசாயிகளுக்கு சென்றடையும் விதமாக செயல்பட வேண்டும். மேலும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக விஞ்ஞானிகள் விவசாய நிலப்பகுதிகளின் மண்ணின் தன்மையை எடுத்துரைத்து அதற்கேற்ற பயிர்வகைகளை பயிரிட தக்க ஆலோசனை வழங்க வேண்டும். இவ்வாறு அவர்கூறினார்.

இந்த கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் அருணா, வேளாண்மை இணை இயக்குனர் அல்டாப், வேளாண்மை துணை இயக்குனர்கள் மதனகோபால், சிவானந்தம், தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் முனியாண்டி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## ரூ.25 லட்சத்திற்கு மஞ்சள் ஏலம் விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி



நாமகிரிப்பேட்டையில் 326 மஞ்சள் மூட்டைகள் ரூ.25 லட்சத்திற்கு ஏலம் போனது. விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

மஞ்சள்ஏலம்

ராசிபுரம் அருகே நாமகிரிப்பேட்டையில் உள்ள ராசிபுரம் தாலுகா கூட்டுறவு உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனை சங்க கிளை வளாகத்தில் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை மஞ்சள் ஏலம் நடந்து வருகிறது. வழக்கம்போல் நேற்றும் மஞ்சள் ஏலம் நடந்தது.

இந்த ஏலத்தில் நாமகிரிப்பேட்டை, ஒடுவன்குறிச்சி, புதுப்பட்டி, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, அரியாக்கவுண்டம்பட்டி, ஆத்தூர், ஊனத்தூர் உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்து விவசாயிகள் மஞ்சளை விற்பனை செய்வதற்காக ஏலத்திற்கு கொண்டு வந்திருந்தனர். மஞ்சளை

ஏலம் எடுப்பதற்காக சேலம், ஈரோடு, நாமகிரிப்பேட்டை, ஒடுவன்குறிச்சி உள்பட பல பகுதிகளில் இருந்து வியாபாரிகள் வந்திருந்து மஞ்சளை ஏலம்எடுத்தனர்.

விலைஉயர்வு

நேற்று நடந்த ஏலத்தில் விரலி ரகம் 283 மூட்டைகளும், உருண்டை ரகம் 43 மூட்டைகளும் கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் விரலி ரகம் குறைந்தபட்சம் ஒரு குவிண்டால் ரூ.8,999-க்கும், அதிகபட்சமாக ரூ.10,701-க்கும், உருண்டை ரகம் குறைந்தபட்சம் ஒரு குவிண்டால் ரூ.8,939-க்கும், அதிகபட்சமாக ரூ.9,449-க்கும் ஏலம் போனது.

நேற்று நடந்த ஏலத்தில் மொத்தம் 326 மஞ்சள் மூட்டைகள் ரூ.25 லட்சத்திற்கு ஏலம் விடப்பட்டது. கடந்த வாரத்தை விட இந்த வாரம் நடந்த ஏலத்தில் மஞ்சள் வரத்து சற்று அதிகமாக வந்திருந்தது. அதே சமயத்தில் விலையும் சற்று உயர்ந்து காணப்பட்டது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

## உழவர் சந்தைகளில் வரத்து அதிகரிப்பால் காய்கறி விலை வீழ்ச்சி



சேலம் மாவட்டத்தில் உள்ள உழவர் சந்தைகளில் காய்கறி வரத்து அதிகமானதால் விலை வீழ்ச்சியடைந்து உள்ளது.

உழவர் சந்தை

சேலம் மாவட்டத்தில் அம்மாபேட்டை, அஸ்தம்பட்டி உள்ளிட்ட 11 இடங்களில் உழவர் சந்தைகள் உள்ளன. இங்கு பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் வந்து காய்கறிகள் வாங்கி செல்கிறார்கள். பண்டிகை நாட்களில் காய்கறிகள் விற்பனை அதிகமாக இருக்கும். இந்த நாட்களில் பொதுமக்களின் கூட்டமும் அலை மோதும். காய்கறிகளின் வரத்துக்கு ஏற்ப விலை உயர்ந்தும், குறைந்தும் காணப்படும்.

இந்த நிலையில் நேற்று உழவர்சந்தைகளில் விற்கப்பட்ட காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:–

கடந்த வாரம் ரூ.18–க்கு விற்ற தக்காளி இந்த வாரம் விலை குறைந்து ரூ.12–க்கு விற்பனை செய்யப்பட்டது. இதேபோல் ரூ.38–க்கு விற்ற கத்தரிக்காய் ரூ.22–க்கும், ரூ.22–க்கு விற்ற புடலைங்காய் ரூ.16–க்கும், ரூ.24–க்கு விற்ற பீர்க்கங்காய் ரூ.20–க்கும், ரூ.16–க்கு விற்ற பூசணிக்காய்

ரூ.15–க்கும், ரூ.26–க்கு விற்ற அவரைக்காய் ரூ.18–க்கும் விற்பனை செய்யப்பட்டது.

<u>விலை வீழ்ச்சி</u>

ரூ.30–க்கு விற்ற கொத்தவரை ரூ.24–க்கும், ரூ.28–க்கு விற்ற பாகற்காய் ரூ.22–க்கும், ரூ.12–க்கு விற்ற முள்ளங்கி ரூ.8–க்கும், ரூ.36–க்கு விற்ற பச்சைமிளகாய் ரூ.32–க்கும், ரூ.26–க்கு விற்ற சின்ன வெங்காயம் ரூ.20–க்கும், ரூ.64–க்கு விற்ற கேரட் ரூ.40–க்கும், ரூ.46–க்கு விற்ற இஞ்சி ரூ.40–க்கும், ரூ.50–க்கு விற்ற பீன்ஸ் ரூ.30–க்கும், ரூ.22–க்கு விற்ற முட்டைக்கோஸ் ரூ.18–க்கும், ரூ.42–க்கு விற்ற பீட்ரூட் ரூ.30–க்கும் விலை குறைந்து உழவர் சந்தைகளில் விற்பனை செய்யப்பட்டது.

இதுகுறித்து உழவர் சந்தை அதிகாரிகள் கூறுகையில், கடந்த காலங்களில் வரத்து குறைவாக இருந்ததால் விலை உயர்ந்து காணப்பட்டது. நேற்று உழவர் சந்தைகளில் விவசாயிகள் அதிகளவு காய்கறிகளை கொண்டு வந்து இருந்தனர். வரத்து அதிகமாக இருந்ததால் கடந்த வாரத்தை காட்டிலும் இந்த வாரம் காய்கறிகள் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. இந்த மாதம் முழுவதும் இதே விலையில்தான் காய்கறிகள் விற்பனை செய்யப்பட வாய்ப்பு உள்ளது. இதில் சின்ன வெங்காயத்தின் விலை மட்டும் உயர வாய்ப்பு உள்ளது என கூறினர்.

**வேளாண்மை, தோட்டக்கலைத்துறை அலுவலர்களுக்கு பயிர் மதிப்பீட்டு ஆய்வு குறித்து பயிற்சி கலெக்டர் தொடங்கி வைத்தார்**



தேனி,

தேனி மாவட்டத்தில் வேளாண்மைத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறையில் பணியாற்றும் அலுவலர்களுக்கு பயிர் மதிப்பீட்டை ஆய்வு செய்வது குறித்தும், தேசிய வேளாண் காப்பீட்டு திட்டம் குறித்தும் பயிற்சி அளிக்க முடிவு செய்யப்பட்டது. இதற்கான 2 நாள் பயிற்சி முகாம் தேனி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நேற்று தொடங்கியது.

முகாமிற்கு மாவட்ட கலெக்டர் வெங்கடாசலம் தலைமை தாங்கி, பயிற்சியை தொடங்கி வைத்து பேசினார். அவர் பேசும் போது, 'உணவுப் பொருட்கள் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கத்திலும், தட்டுப்பாடு இல்லாமல் அனைவருக்கும் உணவு கிடைக்கும் வகையிலும் முன்கூட்டியே திட்டமிட்டு பயிர் மதிப்பீட்டு ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. இந்த பணிகளில் ஈடுபடும் அலுவலர்கள் தங்களுக்கு கொடுக்கப்படும் 4 இலக்க ரேண்டம் எண் மூலம் துல்லியமாக

ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். சரியான தகவல்களை, புள்ளி விவரங்களை கொடுக்க வேண்டும்' என்றார்.

இந்த பயிற்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் பொன்னம்மாள், மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் வெங்கடசுப்பிரமணியன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ரெங்கநாதன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். மாவட்ட புள்ளியியல் துறை துணை இயக்குனர் அப்துல்கரீம், தேசிய மாதிரி ஆய்வு முதுநிலை மேற்பார்வையாளர் ஊர்க்காவலன், புள்ளியியல் துறை உதவி இயக்குனர்கள் பாண்டி, கருத்தராஜ் ஆகியோர் பயிற்சி அளித்தனர். இந்த பயிற்சி இன்றும் (புதன்கிழமை) தொடர்ந்து நடத்தப்படும்.

## பால் கொள்முதல் குறித்து ஆவின் அதிகாரிகளுடன் கலெக்டர் ஆலோசனை



பால் கொள்முதல் செய்தல், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைத்தல் தொடர்பான ஆலோசனைக்கூட்டம் கலெக்டர் எஸ்.ஜெயந்தி தலைமையில் நேற்று மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் உள்ளனர். கூட்டத்தில், குறைந்த விலையில் பால் கொள்முதல் செய்யும் தனியார் நிறுவனங்கள், பால் உற்பத்தியாளர்களின் கோரிக்கையின்படி, கட்டுப்படியான விலைக்கு கொள்முதல் செய்ய பால் உற்பத்தியாளர்களின் பிரதிநிதிகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் ஆவின் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்களை கொண்ட கூட்டம் நடத்தி, தீர்வு காண அதிகாரிகளுக்கு கலெக்டர் உத்தரவிட்டார்.

மேலும் நெல் விளைச்சல் உள்ள பகுதிகளில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைப்பது குறித்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக மற்றும் வேளாண்மைத்துறை அதிகாரிகளுடன் கலெக்டர் ஆய்வு மேற்கொண்டார்.

கூட்டத்தில் கோவை ஆவின் பொது மேலாளர் சுமதி, ஈரோடு ஆவின் துணைப்பொது மேலாளர் ஸ்ரீதர், துணைப்பதிவாளர்கள் ராஜராஜன் (பால்வளம்), சண்முகவேலு (கூட்டுறவு), இணை இயக்குநர் (வேளாண்மை) மகேந்திரன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் ஈஸ்வரி, மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) அல்தாப் ஆகியோர் உட்பட பலர்கலந்து கொண்டனர்.